2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதேபோன்று, மற்றொரு பாரம்பரிய வேளாண் விளைபொருளான பருத்தி, ஆடை நெய்வதற்கான முக்கிய மூலப்பொருளாக விளங்குகிறது. பருத்தி ஆடைகள் கோடையில் நிலவும் கடும் வெப்பத்தையும், பனிக் காலங்களில் நிலவும் கடும் குளிரையும் தாங்கவல்லதாகவும், சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பானதாகவும், சருமப் பராமரிப்பிற்கு ஏற்றதாகவும் விளங்குகின்றன.

இதுபோன்ற பல பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும், பாரம்பரிய பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையிலும், வழக்கொழிந்துபோன பாரம்பரிய பொருட்களைப் புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும், இயற்கையின் படைப்பினைப் பயன்படுத்தி மக்களின் நலத்தினைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவிலான கருத்தரங்கங்கள், விழிப்புணர்வுப் பேரணிகள், வானொலி விளம்பரப் பாடல்கள், "இளநீர் குடியுங்கள், உடல் நலம் பேணுங்கள்" போன்ற மக்களைக் கவரும் வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள், கருத்துக் கண்காட்சிகள், திரையரங்கு விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றின்மூலம் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகளை அறிமுகம் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி, அதன்மூலம் ஊட்டச்சத்துக் குறைவினை அகற்றுதல், பள்ளி செல்லும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரித்தல்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

இடைநிற்றலை அகற்றல் ஆகிய நோக்கங்களை எய்தும்பொருட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் சத்துணவுத் திட்டத்தில், பல காலமாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்த நான், காலத்திற்கு ஏற்பவும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், உணவு முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தேன்.

எனது உத்தரவின்பேரில், புதிய வகை உணவு முறையினை அறிமுகப்படுத்துவது குறித்து புகழ்பெற்ற சமையற் கலைஞர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக்குப் பிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பள்ளியிலும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும் சோதனை முறையில் கொண்டைக்கடலை புலவு சாதம் மற்றும் மிளகுத்தூள் கலந்த முட்டை தயாரித்து பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதனைப் பள்ளிக் குழந்தைகள் விரும்பி உண்பது கண்டறியப்பட்டது. இதுமட்டுமல்லாமல், 13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்களை சமையல் நிபுணர்கள் தயாரித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேற்கூறிய சோதனை முறையின் அடிப்படையில் புதிய உணவு வகைகளை சத்துணவுத் திட்டத்தில் படிப்படியாக அறிமுகம் செய்ய எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில், திங்கட்கிழமையன்று காய்கறி பிரியாணி மற்றும் மிளகுத்தூள் முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) செவ்வாய்க்கிழமையன்று கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலாவும், (மேசையைத் தட்டும் ஒலி) புதன்கிழமையன்று தக்காளி சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) வியாழக்கிழமையன்று சாதம், சாம்பார் மற்றும் வேகவைத்த

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிக்கிழமையன்று கருவேப்பிலை சாதம் அல்லது கீரை சாதம், முட்டை மசாலா மற்றும் மிளகாய்ப்பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில் திங்கட்கிழமையன்று சாம்பார் சாதம் மற்றும் வெங்காயம், தக்காளி முட்டை மசாலாவும்; செவ்வாய்க்கிழமையன்று மீல் மேக்கர், காய்கறி கலவை சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; புதன்கிழமையன்று புளியோதரை மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வியாழக்கிழமையன்று எலுமிச்சை சாதம், தக்காளி முட்டை மசாலா மற்றும் சுண்டலும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிக்கிழமையன்று சாதம், சாம்பார், வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு பொரியலும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, அங்கன்வாடி மையங்களுக்கு வருகைதரும் குழந்தைகளின் சிறப்பம்சம் மற்றும் செரிமானத் திறன் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கும் புதிய உணவு வகைகள் அறிமுகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, திங்கட்கிழமையன்று தக்காளி சாதம், வேகவைத்த முட்டையும்; செவ்வாய்க்கிழமையன்று கலவை சாதம் மற்றும் சுண்டலும்; புதன்கிழமையன்று காய்கறி புலவு சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வியாழக்கிழமையன்று எலுமிச்சை சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக்கிழமையன்று பருப்பு சாதம், வேகவைத்த உருளைக்கிழங்கும்; சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கலவை சாதமும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறைத் திட்டத்தின் செயல்பாடு குறித்து அறிந்த பிறகு, மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை, கல்வி பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கையையும், அவர்களின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. சுகாதாரப் பணிகள் மேம்பாடு மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுதல், பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மனித நேயத்தின் சிகரம் அன்னை தெரசா அவர்களால் 'அன்பு மகளே' என அழைத்து, அரவணைத்து, உலக அளவிலே நான் உருவாக்கிய இந்த மனித நேயத்தை, எனக்குப் பின்னால் கொண்டு செல்கிற மிகச் சிறந்த நிருவாகிகளில் ஒருவராக நீங்கள் வருவீர்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசா அவர்களால் வாழ்த்தப்பட்ட நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மூன்று முத்தாய்ப்பான அறிக்கைகளை விதி 110-ன்கீழ் இங்கு தந்திருக்கிறார்கள்.*

ஓர் அரசு வசதியுடையவர்களுக்கு, வாய்ப்புள்ளவர்களுக்கு, செல்வந்தர்களுக்கு, உதவுவதைவிட ஏழை எளிய மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு, வாய்ப்பு வசதி இல்லாதவர்களுக்கு, ஏக்கத்தில் இருப்பவர்களுக்கு அந்த ஏக்கத்தைப் போக்குகிற வகையிலே திட்டமிடுவது இருக்கிறதே அதுதான் இந்த அரசின் மிகச் சிறந்த சாதனையாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, கிராமப்புற மக்கள், தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்விலே தாங்கள் வளர்வதற்கு, தங்களைக் கைதூக்கி விடுவதற்கு ஒரு கரம் கிடைக்காதா என்று நினைப்பவர்களுக்கு, கைதூக்கி விடுகிற ஒரு ஏந்திழையாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.